## ✠ பிறருக்கு உதவும் பண்புகள் பற்றி

**அன்னம் இட்ட பேரெல்லாம் அநெக கோடி வாழ்கவே**

**சொன்னம் இட்ட பேரெல்லாம் துரைத்தளங்கள் பண்ணலாம்**

**விண்ணம் இட்ட பேரெல்லாம் வீழ்வார் வெந் நரசிலே !**

**கன்னம் இட்ட பேரெல்லாம் கடந்து நின்ற திண்ணமே!**

**அரும்பசிக்கு அன்னதானம் செய்தவர்கள்!!!**

### இதன் விளக்கம் :

கோடி வளம் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று அன்னதானம் செய்வதற்கு பொருள் வேண்டி செல்வந்தர்களிடம் சென்று உதவி கேட்டால் அவர்கள் அதிகாரம் செய்து இல்லை என்று விரட்டலாம். அன்னதானம் செய்வதை குற்றம் என்று சொல்லி வில்லங்கம் செய்பவர்கள் பாழும் நரகக் குழியில் வீழ்ந்து அல்லலுறுவார்கள். அனைத்து உயிரிலும் ஆண்டவன் இருப்பதை அறிந்து அவனைத் தனக்குள்ளேயே கண்டு உள்ளவர்கள் அன்னமிடுவதைப் போல் யோக ஞான சாதனத்தால் தியானிப்பவரால் பத்தாம் வாசலைக் கடந்து கடவுளை அடைவது நிச்சயம்...

## ✠ **தூய வாழ்க்கை**

**எள் இரும்பு கம்பளி இடும்பருத்தி வெண்கலம்**

**அள்ளி உண்ட நாதனுக்கோர் ஆடைமாடை வத்திரம்**

**உள்ளிருக்கும் வேதியர்க்கு உற்றதானம் ஈதிரால்**

**மெள்ளவந்து நோய் அனைத்தும் மீண்டிடும் சிவாயமே!!!**

**இதன் விளக்கம் :** பசி என வந்தோருக்கு அன்னமிட்டு தானியங்கள், கம்பளி போர்வை, பருத்தி ஆடை, வெண்கல பாத்திரங்கள் போன்றவைகளை தானமாக கொடுத்து, தர்மங்கள் செய்து வாழ வேண்டும். முதுமைநாள் உடல் நலிந்து வீட்டுக்குள் இருக்கும் வேதியர்களுக்கு தேவையான உதவிகளை தேடிச்சென்று செய்து தானம், தனம் கொடுக்க வேண்டும். இவ்வாறு தான தர்மங்கள் செய்பவர்களுக்கு மெல்ல வந்த நோய்கள் அனைத்தும் அவர்களை விட்டு விலகும். தானம் தர்மம் செய்து ஈசனை சேரவழி என்பதே பாடல் விளக்கமாகும்.

## ✠**பிறருக்கு உதவும் பண்புகள் பற்றி**

நெற்பயிருக்கு நீர் பாய்ச்சுவோரையும், விழியிழந்தோருக்கு ஊன்றுகோல் வழங்குவோரையும், இரவில் வந்தவர்க்கு இடம் கொடுப்போரையும் அஞ்சி வந்து அடுத்தவர்க்கு அபயம் கொடுப்போரையும், பசியில் தவிர்ப்போருக்கு அன்னதானம் கொடுப்போரையும் சேற்றில் விழுந்த திகைக்கின்றோர்க்குக் கைகொடுப்போரையும், ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோரைக் கரையேற்றுபவரையும் குரு தரிசனம், ஞானிகள் தரிசனம், சிவ தரிசினம் செய்வோரையும் ஒரு நாளும் தடுக்கக்கூடாது.

பிறருடைய பசியை அகற்றுவதோடு மட்டும் ஒருவருடைய ஒழுக்கமும், கடமையும் முடிந்து விடாது. பிறருக்கு ஏற்படும் துன்பங்களைக் களையவும் முன் வர வேண்டும்.

பசியில் துன்புற்று கன்னத்தில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர் கலந்து வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரம் கொடுத்து அவர்களின் வருத்தத்தை மாற்றுவதே! ஜீவகாருண்யமாகும்.

மனிதனாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் தன்னை அறியாமல் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். செய்தும் வருகிறார்கள். ஏனென்றால், நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் பிறரிடம் உதவி பெற்றே வாழ்கிறோம். எனவே உதவி செய்வது வாழ்வின் இன்றியமையாதது ஆகும். பசித்திருப்பவனின் பாத்திரத்தில் உணவு விழுகின்றபோது உணவு அமிழ்தமாய்த் தெரியும். உண்பவன் வீணாக்காது உண்பான். அவனது பசியும் நீங்கும். உலகில் பிறந்தது உதவுவதற்கே என்பதை அறிந்து நாம் வாழ வேண்டும். உழைத்துச் சேர்ப்பது துன்பத்தில் ஆழ்ந்தவரின் துன்பத்தை துடைப்பதற்கே என்பதை அறிந்து பிறருக்கு உதவி செய்து அவர்களையும் மகிழ வைத்து நாம் இன்புற்று வாழ்வோம்.

அப்படி வாழ்வதே உன்னதமான உயர்ந்த வாழ்க்கை ஆகும். அத்தகைய உயர் வாழ்வை நாடி அனைவரும் வாழ முயல்வோம், வாழ்க்கை இன்பமாகும்.